**முதன்மை செயலர் / கருவூலக் கணக்கு ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**தமிழ்நாடு, சென்னை-35**
*********

**முன்னிலை: திரு. குமார் ஜயந்த், இ.ஆ.ப.,**

செ.மு.ந.க.எண்:520/2020/சி4 நாள்:11.03.2021.

| | |
|---|---|
| **பொருள்:** | பணியமைப்பு - கருவூலக் கணக்குத் துறை - திருமதி.V.சத்தியபாமா, இளநிலை உதவியாளர், மதுரை மாவட்டக் கருவூல அலகு - கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டது - பணிவரன்முறை செய்யப்பட்டது - தகுதிகாண்பருவம் துவங்குதல்- ஆணை வெளியிடல். |
| **பார்வை:** | 1.சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை அவர்களின் கடித எண் ந.க. 2779/2017/நிர்வாகம்-1/U2,நாள்:31.03.2017. |
| | 2.அரசாணை(3ப) எண்:03 நிதி(க.க-2) த் துறை, நாள்:22.02.2021. |

*******

**ஆணை:**

கருவூலக் கணக்குத் துறையில் மதுரை மாவட்ட கருவூல அலகில், சார்நிலைக் கருவூலம் மதுரை வடக்கு-ல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த திரு.V.செந்தில்குமார் அவர்கள் பணியிலிருக்கும் போது 15.09.2015 அன்று பணியிடை மரணமடைந்ததைத் தொடர்ந்து, இறந்த அரசு ஊழியர் திருமணமாகாதவர் என்பதால் அவரது தாயார் மற்றும் தந்தை ஆகியோர் வயது மற்றும் நோய் காரணமாக வேலை செய்ய இயலாத நிலை என்பதால் திருமணமாகாத அவரது சகோதரி வாரிசுதாரர் என்பதன் அடிப்படையில் செல்வி.V.சத்தியபாமா அவர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு பார்வை-1ல் காணும் செயல்முறை ஆணைப்படி 03.04.2017 முற்பகல் முதல் மதுரை மாவட்ட கருவூல அலகில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்துவருகிறார்.

பார்வை-2ல் காணும் அரசாணையில் செல்வி.V.சத்தியபாமா அவர்களின் பணி தமிழ்நாடு அரசுப்பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016-ல் பிரிவு 28-ன் உட்பிரிவு (1)-ன் படி தனியர் பணியேற்ற நாளான 03.04.2017 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி பார்வை-2ல் காணும் ஆணையில் அரசு ஆணையிட்டுள்ளதைத் தொடந்து தனியர் பணியேற்ற நாளான 03.04.2017மு.ப முதல் தகுதிகாண்பருவம் துவங்கப்பட்டு மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவத்தினராக கருதப்படுவார் எனவும், மேற்கூறிய தகுதிகாண்பருவத்தில் தனியர் இளநிலை உதவியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட தேர்வுகள் மற்றும் பயிற்சிகளை நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

இவ்வாறு பணிவரன்முறை செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஊதிய உயர்வு/ ஊதிய நிலுவைத் தொகை ஏதுமிருப்பின் தனியர் அவற்றினைப் பெறத் தகுதியுடையவராகிறார்.

குமார் ஜயந்த்
முதன்மை செயலர்/கருவூலக் கணக்கு ஆணையர்.

பெறுநர்:

1. செல்வி.V.சத்தியபாமா, இளநிலை உதவியாளர், மாவட்ட கருவூலம், மதுரை.
2. சம்பளக் கணக்கு அலுவலர்,சம்பளக் கணக்கு அலுவலகம்(மதுரை).
3. இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்.
22/3/2021

22/3/21

மே.மு.ந.க.எண்: 13778/2018/நி1/அ2 நாள்: 07-21

சார்பு செய்யப்படுகிறது.

சகஅ, மதுரை 7/7/21

பெறுநர்:

1) திருமதி.ம.சத்தியபாமா (உரிய வழிமுறையாக)
கருவூல அலுவலர்
மாவட்ட கருவூலம்.
மதுரை.

2) கருவூல அலுவலர்.
மாவட்ட கருவூலம்.
மதுரை